**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.NO. 87/2007 |
| Prosecution Witness | : | **அ.சா.**3 |
| Name | : | **ரவி** |
| Father's / Husband Name | : | **கந்தவேலு** |
| Address | : | **மதுரை** |
| Age | : | 68/2025 |

**<u>தேதி : 10.03.2025</u>**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். தற்போது வழக்கறிஞராக பணி செய்துவருகிறேன். இவ்வழக்கு சம்பவ காலத்தில் United India Insurance company Division 2 Trichy கோட்ட மேலாளராக அலுவல் புரிந்து வந்தேன். எம்.சி. ஓ.பி. 2644/2000 மற்றும் எம்.சி. ஓ.பி. 2645/2000 ஆகிய வழக்குகள் திருச்சியில் உள்ள மோட்டார் வாகன இழப்பீடு தீர்ப்பாயத்தில் நடைபெற்றது. அந்த வழக்கில் நாங்கள் எதிர் தரப்பினர் என்பதால் அந்த வழக்கின் நகல்கள் எங்களுக்கு சார்வு செய்யப்பட்டது. மேற்படி இழப்பீடு வழக்குகள் சம்மந்தமாக புலன் விசாரணை செய்யும்படி எங்களது நிறுவனத்தை சேர்ந்த ஸ்ரீரெங்கராஜன் என்பவரை நான் நியமித்தேன். அவர் புலன் விசாரணை செய்து இழப்பீடு வழக்கு சம்மந்தப்பட்ட பெரம்பலூர் காவல் நிலைய குற்ற எண். 79/2000 உள்ளப்படி வாகன எண்கள் TN 46 6833 சுசிகி வாகனம் மற்றும் TN 46 A 0057 டி.வி.எஸ் 50 ஆகிய வாகனங்கள் சம்மந்தப்படவில்லை என்று அறிக்கை கொடுத்தார்.

உண்மையில் TN Q 4577 ராஜ்தூத் வாகனத்தில் ராஜா என்பவர் ஓட்ட கருணாநிதி என்பவர் பின்னால் உட்கார்ந்து சென்றபோது சாலை ஓர புளியமரத்தில் மோதி பெரம்பலூர் ரோவர் கல்லூரி அருகே விபத்து நடந்ததாக கருணாநிதியினுடைய ஏ.ஆர் காபியில் கண்டுள்ளபடி எங்களுக்கு அறிக்கை செய்தார். அறிக்கையை 13.07.2005ல் எங்களிடம் கொடுத்தார். அதில் மேல் விசாரணை செய்வதற்கான முகாந்தரம் இருந்ததால் உயர் நீதிமன்ற வழிகாட்டுதலின்படி நான் 31.08.2005 அன்று சென்னை சி.பி.சி.ஐ.டி. டி.ஐ.ஜி ஆபிஸிக்கு புகார் அளித்தேன். அத்துடன் புலன் அறிக்கை சேர்ந்த ஆவணங்கள் அனுப்பிவைத்தேன். பிறகு 09.12.2005 அன்று டி.சி.பி பெரம்பலூர் போலீஸார் என்னை விசாரித்தார்கள். **31.08.2005 தேதியிட்ட சென்னை சி.பி.சி.ஐ.டி அலுவலகத்திற்கு நான் அனுப்பிய புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**<u>1 மற்றும் 3வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் தற்போது நீதிமன்றத்தில் சொன்ன சங்கதிகளைத்தான் போலீஸார் என்னை விசாரித்தபோதும் சொன்னேன் என்றால் சரிதான். கோட்ட மேலாளராக பிரிவு 2ல் பணியாற்றியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால்சரிதான். நான் 31.08.2005 அன்று சென்னை சி.பி.சி.ஐ.டி. டி.ஐ.ஜி ஆபிஸிக்கு புகார் அளித்ததற்கான அஞ்சலக ரசீது மற்றும் ஒப்புகை அட்டைகளை போலீஸாரிடம் கொடுத்தேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. அ.சா.ஆ.1 புகார் மனுவில் என்னுடைய பெயரை குறிப்பிடவில்லை என்றால் கம்பெனியின் அலுவலக பதவி பெயரை குறிப்பிட்டு புகார் கொடுத்துள்ளேன். புகார்மனுவில் என்னுடைய முழு முகவரி மற்றும் பதவி பெயர் குறிப்பிடவில்லை என்றால் பதவி பெயர் குறிப்பிட்டுள்ளேன், என்னுடைய பெயரை குறிப்பிடவில்லை.

நான் சம்பவ காலத்தில் கோட்ட மேலாளராக பணி செய்ததற்கான ஆவணங்களை போலீஸாரிடம் கொடுத்தேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் போலீஸாரிடம் எந்த ஆவணமும் கொடுக்கவில்லை என்றாலும்,

ஞாபகமில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. என்னுடைய புகாரிலும், வாக்குமூலத்திலும் தற்போது நீதிமன்றத்தில் கூறியப்படி மருத்துவ விபத்து பதிவேடு குறித்தும் வழக்கு சம்மந்தமாக புலனாய்வு செய்ய அலுவலரை நியமனம் செய்ததை குறித்தும் புலன் விசாரணை அலுவலர் அறிக்கை சமர்ப்பித்ததை குறித்தும் அந்த அறிக்கையின் அடிப்படையில் புகார் கொடுத்ததாக புகாரிலும், வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

என்னுடைய புகார்மனுவிலும், போலீஸார் விசாரணையிலும் நான் மேலே சொன்ன சங்கதிகளை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய புகார் மனுவில் TN 46 6833 வாகனத்தின் ஓட்டுநர் சுப்பிரமணியன் என்பவர் மீது மட்டும் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. முழு வழக்கையும் விசாரிக்கும்படிதான் கோரியுள்ளேன். நான் என்னுடைய புலன் விசாரணை அலுவலர் கொடுத்த அறிக்கையை சரியாக படித்து பார்க்காமல் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் என்னுடைய புகாருடன் வேறு எந்த ஆவணங்களையும் இணைத்து அனுப்பவில்லை என்றால் சரியல்ல. நான் புகார் கொடுத்த பிறகு 09.12.2005 அன்று என்னுடைய அலுவலகத்திற்கு வந்து போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

09.12.2005 அன்று என்னை ஆய்வாளர் விசாரித்தார். விசாரித்தபோது எந்தெந்த ஆவணங்களை கொடுத்தேன் என்று எனக்கு ஞாபகமில்லை. நான் சொன்ன தேதியில் என்னை ஆய்வாளர் விசாரிக்கவில்லை என்றாலும், எந்த ஆவணங்களும் அவரிடம் நான் கொடுக்கவில்லை என்றாலும், நான் பணி செய்யும் நிறுவனத்திற்கு ஆதரவாக புகாரிலும், வாக்குமூலத்திலும் உள்ள சங்கதிகளுக்கு முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய பணி காலத்தில் நான் உத்தேசமாக சுமார் 10 புகார்கள் கொடுத்திருப்பேன். இயந்திரதனமாக இந்த புகாரை கொடுத்துள்ளேன் என்றாலும், தவறான தகவலின்படி உயர் அதிகாரிகள்

கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>2வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் கொடுத்த புகாரில் இரண்டாவது எதிரி மோகனபிரியாவின் பெயர் குறிப்பிட்டு கொடுக்கவிலலை என்றால் சரிதான். எம்.சி.ஓ.பி. 2644/2000 வழக்கு மோகனபிரியா அவர்களால்தான் போடப்பட்டுள்ளது. போலீஸார் என்னை 09.12.2005 அன்று விசாரித்தார்கள். நான் சொன்ன தேதியில் போலீஸார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. எங்களுடைய அலுவலக புலன் விசாரணை அலுவலர் மோகனபிரியாவின் பெயரை அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் எம்.சி.ஓ.பி. 2644/2000 வழக்கை பொய்யான தகவலின் அடிப்படையில் போடப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். இரண்டாவது எதிரிக்கு இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றாலும், அவருடைய கணவர் இறந்ததற்காக வாரிசு அடிப்படையில் இழப்பீடு கேட்டு மனு செய்துள்ளார் என்றால் சரியல்ல. 2வது எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல.

Taken down by / before me in open court read over / interpreted to the witness in the presence of the accused / accused/ pleader and admitted by the witness to be correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.